In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| S.C.No. 49/2021 | Prosecution witness P.W.12 |
| Name: Dr. Sundararajan | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 01-04-2025.

**( Accused absent, petition u/s 355 BNSS. filed and allowed,)**

முதல் விசாரணை :-

நான் தற்போது தேனி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இணை பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். நான் கடந்த 17.05.2020ம் தேதியன்று மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் பணிமருத்துவராக இருந்தபோது 31 வயது மதிக்கத்தக்க திரு செண்பகராஜா என்பவரை சிகிச்சைக்காக அழைத்து வரப்பட்டார். அவர் அதே தினம் காலை 2 மணியளவில் கொடைரோட்டில் தெரிந்த ஒரு நபரால் கத்தியால் தாக்கப்பட்டதாக தெரிவித்தார். திண்டுக்கல் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று மேல்சிகிச்சைக்காக மதுரை மருத்துவமனை வந்ததாக கூறினார். அவரை நான் பரிசோதித்தேன். அவருக்கு கீழ்க்கண்ட காயங்கள் காணப்பட்டது.

1. தலையின் பின்புறத்தில் 6 c.m அளவில் தையலிடப்பட்ட காயம் இருந்தது.
2. இடது பக்கவாட்டில் 4 செ.மீ. அளவில் தையலிடப்பட்ட காயம் இருந்தது.
3. இடது விலாவில் 2 செ.மீ. அளவில் தையலிப்பட்ட காயம் இருந்தது.
4. வலது முழங்கையில் 5 4 .செ.மீ. அளவில் ஒரு சிராய்ப்புக்காயம் இருந்தது.

அவர் வயிற்றில் ஏற்பட்ட காயத்திற்காக அதே தினம் அவசரமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. அவரது இடது உதரவிதானத்தில் காயம் இருந்தது. நெஞ்சுக்கூட்டில் 1.1/2 லிட்டர் அளவில் இரத்தம் இருந்தது. அது

சரிசெய்யப்பட்டது. அறுவை சிகிச்சைக்கு பிறகு அவரது உடல்நிலை சீராக காணப்பட்டது. இரண்டு நாட்களுக்கு பிறகு அவருக்கு ஏற்கனவே இருந்த நெடுநாள்பட்ட ஈரல் அழற்சி மற்றும் தொய்வு காரணமாக மஞ்சற்காமாலை படிப்படியாக அதிகரித்து அதற்குரிய சிறப்பு மருத்துவக்குழு ஆலோசனை பெறப்பட்டு முறையாக சிகிச்சை செய்யப்பட்டது. இருப்பினும் சிறுநீரக பாதிப்பும் ஏற்பட்டு அதற்குண்டான மருத்துவக்குழு ஆலோசனை பெறப்பட்டு முறையாக சிகிச்சை செய்யப்பட்டது. 5.6.2020 ம் தேதி இவ்வாறாக அவரது உடல்நிலையில் படிப்படியாக முன்னேற்றம் குறைந்து காணப்பட்டும் அதற்குரிய அனைத்து பரிசோதனைகளும் சிகிச்சை முறைகளும் முறையாக மேற்கொள்ளப்பட்டது. இருப்பினும், அந்த நோயாளியானவர் சிகிச்சை பலனிக்காமல் 5.6.2020 ம் தேதி காலை 8.10 மணியளவில் இறந்துவிட்டார்.

அந்த நபருக்கு ஏற்பட்ட பலதரப்பட்ட காயங்களினாலும் மற்றும் அவருக்கு இருந்த ஈரல் அழற்சி மற்றும் சிறுநீரககோளாறு ஆகியவற்றால் அந்த நபர் இறந்திருக்கக்கூடும் என்று நான் இறப்பு இன்டிமேசனை காவல்துறைக்கு கொடுத்தேன். அந்த இறப்பு இன்டிமேசன் அதசாஆ.10. இறந்த நபரின் உடல் போலீசாரிடம் உடற்கூராய்வுக்காக ஒப்படைக்கப்பட்டது. நான் அரசு மருத்துவமனையில் உள்ள நிலைய மருத்துவ அலுவலர், மதுரை அவர்களுக்கு இது சம்மந்தமாக 16.09.2020 ம் தேதியன்று கடிதம் கொடுத்தேன். அந்த கடிதம் அதசாஆ.11. ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–**

17.05.2020 முதல் 5.6.2020 வரை 20 நாட்கள் சிகிச்சை சம்மந்தமாக போலீசாரிடம் ஆவணங்கள் எதையும் நான் ஒப்படைத்தேனா என்றால் இல்லை. மேற்சொன்ன காயங்கள் அனைத்தும் தையலிடப்பட்ட காயங்கள் என்றால் சரிதான். அந்த தையல் ஒரு வாரத்திற்கு முன்னதாக போடப்பட்டிருக்கக்கூடும் என்றால் சரியல்ல. இரண்டு தினங்களுக்கு முன்னர் போடப்பட்டதாக

இருக்கலாம். இறந்த நபருக்கு வயிற்றிலும், ஈரலிலும், மஞ்சள்காமாலை நோயும், சிறுநீரக பாதிப்பும் ஏற்பட்டிருந்ததாலும் இறப்பு ஏற்பட வாய்ப்புண்டு என்றால் சரிதான்.

மறு விசாரணை – இல்லை

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2025.04.01 15:00:12 +0530

Principal District Judge,
Dindigul.